மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) விவரங்களடங்கிய அறிக்கை @ பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

* 322 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது மேட்டுப் பாளையத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதி துவக்கும் குறிப்பு ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி : தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்தில் ஏராளமான பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க விடுதி இல்லை. அவர்கள் மனக்குறையைப் போக்கும் வகையில் அவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது அப்படிப் பட்ட பரிசீலனை இல்லை. நிதிநிலை வசதி ஏற்படும்போது மாண்பு மிகு உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்படும்.

தாமிரவருணி ஆற்றின் குறுக்கே பாலம்

* 323 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-69-ம் ஆண்டில் தென் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் முக்கூடல் வீரவநல்லூர் கிராமங்களை இணைக்க தாமிரவருணி நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டவும் மேற்படித் திட்டத்தினைத் திட்ட வேலையில் சேர்ப்பதற்கும் அரசின ருக்குச் சிபாரிசு செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் யாவை?

@ 601–503-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 மார்ச் 7]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) நிதி பற்றுமை காரணமாக இப்பால வேலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலனேக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லே.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலேவரவர்களே, இந்தப் பாலம் 1968-ம் ஆண்டே வேண்டுமென்று நானும், எனக்கு முன்னுல் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் வற்புறுத்தி இருக்கிருேம். இனிமேலாவது இந்தப் பாலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சீக்கிரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தப் பாலத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. 1974-75-ம் ஆண்டில் நிதி நிலே வசதியைப் பொறுத்து இந்தப் பாலம் அமைக்கும் திட்டம் பரிசீலனேக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சடையனேரிக் கால்வாய்.

* 324 வினு—**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் வட்டத்திலுள்ள தென் கரைக்குளம் அதன் கீழுள்ள குளங்களுக்கென சடையனேரிக் கால்வாய் வெட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், கால்வாய் வேலேகள் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் கால்வாய் குளத்திலிருந்து சடையனேரி குளத்திற்குத் தண்ணீர் விடுவதற்கு ஒரு புதிய கால்வாய் வெட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 16.60 லட்ச செலவில் அரசினரால் ஜுலே 1972-ல் அங்கீகரிக்கப் பட்டது.

(இ) இத்திட்டத்திற்கான வேலேகள் நடந்து கொண்டிருக் கின்றன.